**பிபிலை பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிபிலை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் கடை வாடகை வருமானம் ரூபா 132,000 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்து. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது கணக்கு தயாரிக்கும் போது சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். |
| (ii) | சபைக்குச் சொந்தமான 05 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது கணக்கு தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 19(1)(xii) ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான பல்நோக்கு கட்டிடம் 15 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்கும் போது அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதம அமைச்சரின் அங்கீகாரம் இது வரையிலும் கிடைக்காதிருந்தமையை அறியத்தருகின்றோம். |
| (ii) | 139 ஆம் பிரிவு | ஆதன வரி விதிப்பதன் கீழ் ஆதனங்களுக்கு வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தவணை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது தவணை அறிக்கை கோரப்படும் என அறியத்தருகின்றோம் |
| (iv) | 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 5,434,653 தொகையான நிலுவை ஆதன வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தின் போது ஆதனங்களை தடை செய்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 அம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 39 ஆம் பிரிவு | தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் பரிந்துரைகளுக்கு 3 மாதங்களில் பதிலளிக்கப்பட வேண்டும். | தவறினால் அதை சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைக்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்பட்ட 64 கட்டிட திட்டங்களுக்கு உரிய தரச்சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | நிர்மாணங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்து வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தரச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத தரப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,090,344 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,267,729 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 8,468,650 | 8,761,099 | 6,830,215 | 1,930,884 | 5,924,975 | 6,412,936 | 4,192,378 | 2,220,558 |
| (ii) | வாடகை | 17,930,530 | 13,973,243 | 12,590,068 | 1,383,175 | 12,142,338 | 11,609,839 | 9,262,937 | 2,346,902 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,550,500 | 1,789,648 | 1,789,648 | - | 250,000 | 350,220 | 350,220 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 21,047,500 | 24,747,690 | 18,251,694 | 6,495,996 | 205,000 | 1,181,148 | 1,181,148 | - |
| | மொத்தம் | 48,997,180 | 49,271,680 | 39,461,625 | 9,810,055 | 18,522,313 | 19,554,143 | 14,986,683 | 4,567,460 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| ஆதன வரி | | | |
| (i) | ஆதன வரி அறவிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் சபையினால் 1990 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டிருந்ததுடன் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களை இனங்கண்டு ஆதன வரியை அறவிடுவதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | முன்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு அதன் பிரகாரம் ஆதன வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்காக சபை அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டின் சிட்டையிடப்பட்ட ரூபா 3,163,819 தொகையான ஆதன வரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,434,772 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட பெறுமதியில் 45 சதவீதம் ஆகும். இந்த நிலுவை ஆதன வரியில் ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட நிலுவை ஆதன வரி அலகுகள் 65 ஆக இருந்ததுடன் அவற்றிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 1,195,168 ஆகும். | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 5,160,699 தொகையான நிலுவை ஆதன வரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 3,999,881 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |

அந்த அறவிடப்படாத பணம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதன வரித் தொகையில் 77 சதவீதமாக இருந்தது.

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலுவை ஆதன வரி வருமானம்<br>சபைக்குரிய 09 ஆதனங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,184,013 வாடகை பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை பணம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

**2.2.4 நிரந்தர வியாபார விளம்பர அறித்தல் பதாதைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 35 அறிவித்தல் பதாதைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 96,150 தொகையான அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருமான பரிசோதகர் உத்தியோகத்தரினால் மெய்மெய்யாய்வு மேற்கொண்டு அறிவித்தல் பதாதைகள் இனங்காணப்பட்டு கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கட்டணம் அறவிட முடியாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.5 நீர் கட்டண வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 613,490 தொகையான நிலுவை நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020 மே 30 இல் உள்ளவாறு ரூபா 348,003 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,463,383 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 5,510,893 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 886,232 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணத்தில் ரூபா 1,681,134 தொகை என்பன அறவிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்கள் தொடர்பாக உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | 03 விடயங்கள் தொடர்பாக உப விதி வரைவு தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் ஏனைய விடயங்களுக்கான உப விதி வரைவு தயாரிக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | இலக்கு மற்றும் நோக்கங்களை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 பதவிகளில் காணப்பட்ட ஊழியர் மிகை 16 ஆகவும், 05 பதவிகளுக்குரிய ஊழியர் வெற்றிடம் 05 ஆகவும் காணப்பட்டன. | மிகையான பதவியணியினரை முறைமைப்படுத்தவும் வெற்றிடங்களை நிரப்பவும் வேண்டும். | 2013 சனவரி 01 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் போதியளவாக இல்லாதிருந்தமையினால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் புதிய பதவிகளுக்காக பொதுவான அறிக்கை முகாமைத்து சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **வீதி பதிவேடு நாளாது வரையாக்கப்படாமை** | | |
| சபையில் பேணிச் செல்லப்படுகின்ற வீதிப் பதிவேடு 2012 ஆம் ஆண்டின் பின்னர் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிப் பதிவேடு நாளது வரையாக்கப்பட வேண்டும். | போதியளவான பதவியணியினர் காணப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தின் போது பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

## 3.4 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 02 இயந்திர உபகரணங்கள் 2019 சனவரி 01 முதல் 2019 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதியில் 1,486.53 மீட்டர் மணித்தியாலங்கள் ஓடப்பட்டு 257 வேலைகள் நிறைவேற்றப்பட்டதாக நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் காண்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 1,208,211 எரிபொருள் செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வேலைகளுக்குரிய மதிப்பீடு மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பன தயாரிக்கப்பட வேண்டும | ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மாத்திரம் இருப்பதனால் மதிப்பீடு மற்றும் பூர்த்தி வேலை அறிக்கை என்பவற்றை தயாரிக்க முடியாதிருந்ததை அறியத்தருகின்றோம். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பேரிதயளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சபையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது குழுக்கூட்டம் நடாத்தப்படாதிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |